# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

**INTEGRATED INVESTIGATION FORM-I**

C 8044373

1. District மாவட்டம் : Salem    PS: காவல்நிலையம் : V&AC    Year: ஆண்டு : 2023    FIR No.: மு.த.அ. எண் : 04/AC/23    Date: நாள் : 15/6/23

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018    Sections பிரிவுகள்: u/s 7(A) and (a)

   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை : on 09.06.23 at morning on 13.06.23 at 17.30 hrs at AC office

   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15/6/23    Time : நேரம் 7.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15/6/23    Time : நேரம் 7.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : 5 kms South East

   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி : O/o The District Manager TAHDCO [illegible] Salem

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : S. Kumar    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : Sh. Jeyaram

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 41/23    (d) Nationality : நாட்டினம் : Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் : Agriculture Coolie work    (g) Address : முகவரி : Door no 3717/1, That [illegible] [illegible] [illegible] Post [illegible] Salem Dt

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) Tmt. Santhi District Manager i/c TAHDCO Salem Dt
   2) Tmt. Santhi [illegible] TAHDCO Salem Dt

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.18(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / கைவிருந்துள்ள சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / கைவிருந்துள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...N.K. Ramachandran... பதவி ...Inspector of Police... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ...VIA Salem... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15/6/23 at 09.30 h

Name: பெயர் ...(N.K. RAMACHANDRAN)...
Rank: நிலை ...Inspector of Police... No. எண் ..........
VIPC
Salem.

<u>சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவ குற்ற எண் 4/AC/2023 u/s 7(A) and (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.</u>

இன்று 10.06.2023 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது, S.குமார், த/பெ. செவத்தான், கதவு எண்.3717/1, தாழ் எறும்பூர், மணியாரகுண்டம் அஞ்சல், பெத்தநாயக்கன்பாளையம் தாலுகா, சேலம் மாவட்டம். என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த, கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புதல் S.குமார், த/பெ. செவத்தான், கதவு எண்.3717/1, தாழ் எறும்பூர், மணியாரகுண்டம் அஞ்சல், பெத்தநாயக்கன்பாளையம் தாலுகா, சேலம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு பிரிவு, சேலம். அய்யா, நான் தாழ் எறும்பூர் கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தமாக 4 ஏக்கர் விவசாய நிலம் தாழ்எறும்பூர் கிராமத்தில் உள்ளது. அதில் விவசாயம் செய்து வருகிறேன். நான் இந்து மலையாளி இனத்தைச் சேர்ந்தவன். நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எனது சொந்த நிலத்தில் விவசாயம் செய்வதற்கும் மற்றும் மீதி நேரத்தில் வாடகைக்கும் டிராக்டர் ஓட்டலாம் என்று முடிவு செய்தேன். அதற்காக சேலம் சீலநாயக்கன்பட்டியில் உள்ள தாட்கோ அலுவலகத்தின் மூலம் டிராக்டர் வாங்குவதற்கு அரசால் மானியம் வழங்கப்படுகிறது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேன். அதன் பின்னர் தாட்கோ அலுவலகத்திற்கு 24.05.2023 தேதி சென்று மானியத்தில் டிராக்டர் வாங்குவது தொடர்பாக அந்த அலுவலகத்தில் இருந்த திருமதி. சாந்தி என்ற உதவியாளரிடம் கேட்டேன். அதற்கு அவர் குடும்ப அட்டை, சாதிச்சான்று, ஆதார் கார்டு எனது போட்டோ மற்றும் டிராக்டர் வாங்குவதற்குரிய கொட்டேசன் ஆகியவைகளுடன் ஆன்லைன் சென்டரில் பதிவு செய்யுமாறு கூறினார். அதன் பிறகு நான் 25.05.2023 ஆம் தேதி சேலம் கொண்டலாம்பட்டி, பைபாஸ் ரோட்டில் உள்ள பரணி மோட்டார் என்ற விற்பனையாளரிடம் மகேந்திரா 575 என்ற டிராக்டர் வாங்க ரூ.7,75,000/– க்கு எனது பெயரில் கொட்டேசன் வாங்கினேன். மேலும் ஆன்லைனில் பதிவு செய்ய திட்ட அறிக்கை வேண்டும் என்ற விவரத்தை தெரிந்து கொண்டு அந்த அறிக்கையை வாழப்பாடி சாமி அன்கோ என்ற ஆடிட்டர் அலுவலகத்தில் வாங்கினேன். பிறகு 28.05.2023 ஆம் தேதி எனது நண்பர் திரு. கனகராஜ் என்பவரின் மொபைல் போன் மூலம் ஆன்லைனில் பதிவு செய்தேன். எனது பதிவு தொடர்பான ஒப்புகைச் சீட்டை மொபைல் போன் மூலமாகவே பெற்றேன். ஒப்புகைச் சீட்டு எண். TAHDCO-ST-2023-24-EDP-SL-486 ஆகும். அதன் பிறகு சேலம் தாட்கோ

அலுவலகத்தில் இருந்து 06.06.2023 ஆம் தேதி மாலை எனது செல்போனில் தொடர்பு கொண்ட ஒரு பெண் என்னிடம் டிராக்டருக்கு அப்ளை செய்துள்ளீரா என்று கேட்டார். நானும் ஆமாம் என்று சொன்னேன். நீங்க 08.06.2023 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு நேர்காணலுக்கு சேலம் தாட்கோ ஆபீசிற்கு வரவேண்டும் என்றும், அவ்வாறு வரும்போது ஆன்லைனில் பதிவு செய்தபோது பயன்படுத்திய ஆவணங்களின் அசல் மற்றும் ஜெராக்ஸ் இரண்டு செட் எடுத்து வரவேண்டும் என்றும் தெரிவித்தார். நானும் அதற்கு சரி என்று சொல்லிவிட்டேன். அதன் பின்னர் 08.06.2023 ஆம் தேதி காலை எனக்கு சில வேலை இருந்ததால் அன்று மதியம் சுமார் 1.30 மணியளவில் சேலம் தாட்கோ அலுவலகத்திற்குச் சென்றேன். அலுவலகத்தில் இருந்த மணி என்பவர் நான் கொண்டு சென்றிருந்த ஆவணங்களை என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார். பின்னர் தாட்கோ மேலாளர் திருமதி. சாந்தி அவர்கள் நேர்காணல் நடத்தினார். நேர்காணலில் மேலாளர் திருமதி. சாந்தி தவிர மேலும் நான்கு பேர் இருந்தனர். அதில் இருந்த ஒருவர் என்னிடம் ஏற்கனவே வேறு ஏதாவது மானியம் பெற்றுள்ளீர்களா என்று கேட்டார். நான் 10 ஆண்டுகளுக்கு முன்னர் மாடு வாங்குவதற்காக கால்நடைத்துறை சார்பாக மானியம் பெற்றிருந்த விவரத்தைச் சொன்னேன். அதன் பிறகு நான் ஏற்கனவே மானியம் வாங்கிவிட்டதால் எனக்கு தகுதி இல்லை என்றும் கொட்டேசன் கலர் ஜெராக்ஸ் வைத்துள்ளதாக சொல்லி எனது விண்ணப்பத்தில் ஏதோ எழுதினார்கள். பின்னர் அங்கிருந்த உதவியாளர் திருமதி. சாந்தி அவர்களை நான் சந்தித்தபோது அவர் அவரது போன் நெம்பரை என்னிடம் கொடுத்து அதில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்து என்னை அங்கிருந்து கிளம்புமாறு கூறினார். நான் அடுத்தநாள் 09.06.2023 ஆம் தேதி காலையில் உதவியாளர் திருமதி. சாந்தி கொடுத்திருந்த போன் நெம்பர் 7448385728 ல் தொடர்பு கொண்டேன். அவர் போனை எடுக்கவில்லை. பிறகு சுமார் அரைமணி நேரம் கழித்து உதவியாளர் திருமதி. சாந்தி என்னை எனது செல் போன் 9080926240 ல் தொடர்பு கொண்டு ஏன் கொட்சேன் கலர் ஜெராக்ஸ் வைத்திருந்தீர்கள், டிராக்டர் மானியம் ரூ.3,75,000/- அந்த மானிய தொகையை சேங்சன் செய்ய வேண்டும் என்றால் மேலாளர் சாந்தி மேடம் தனியாக எவ்வளவு தொகை கேட்பார்கள் என்று உங்களுக்கு தெரியுமா என்று என்னிடம் கேட்டார். நான் அதற்கு அது பற்றி தெரியாது என்று கூறியபோது அதற்கு அவர் ரூ.20,000/- வாங்குவாங்க என்று கூறினார். நான் என்னிடம் அவ்வளவு தொகை இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் முதலில் ரூ.10,000/- த்தை கொடுத்து விடுங்கள் என்றும், மீதி ரூ.10,000/- த்தை பார்ம் 3 கொடுக்கும்போது கொடுத்துவிடுங்கள் என்று

கூறினார். நான் யோசனை செய்து கூறுகிறேன் என்றும், மீண்டும் எப்பொழுது வரவேண்டும் என்று கேட்டபோது 10.06.2023 ஆம் தேதி மேலாளர் மேடமும் தானும் அலுவலகத்தில் இருப்பதாகவும் எனவே சனிக்கிழமை என்னை தாட்கோ அலுவலகத்திற்கு வருமாறும் கூறினார். எனக்கு சனிக்கிழமையன்று வேறு வேலை இருந்ததால் திங்கள் கிழமை வரலாமா என்று கேட்க உதவியாளர் திருமதி. சாந்தி அவர்களுக்கு போன் செய்தேன். அவர் போனை எடுக்கவில்லை. சிறிது நேரத்தில் உதவியாளர் திருமதி. சாந்தி அவர்கள் என்னை அவரது செல்போனில் இருந்து தொடர்பு கொண்டு இன்று வரவேண்டாம், தங்களுக்கு வேறு வேலை உள்ளது என்று தெரிவித்தார். அதற்கு நான் திங்கள் கிழமை வரட்டுமா என்று கேட்டபோது என்னை செவ்வாய்க்கிழமை வருமாறு கூறினார். அதன்படி நான் 13.06.2023 ம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் சென்றபோது மாவட்ட மேலாளர் திருமதி. சாந்தி அவர்கள் அலுவலகத்தில் இருந்தார். அவர் அருகிலேயே உதவியாளர் திருமதி. சாந்தி அவர்களும் இருந்தார். நான் நேரடியாகச் சென்று மாவட்ட மேலாளர் திருமதி. சாந்தி அவர்களை பார்த்தபோது அவர் என்னிடம் என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு உதவியாளர் திருமதி. சாந்தி அவர்கள் மாவட்ட மேலாளர் திருமதி. சாந்தி அவர்களிடம் இவர்தான் மேடம் நான் ஏற்கனவே தங்களிடம் சொல்லியிருந்த நபர் என்று கூறினார். என்னை சிறிது நேரம் காத்திருக்குபடி தெரிவித்ததால் நான் அலுவலகத்திற்கு வருகை புரிபவர்கள் அமரும் இருக்கையில் அமர்ந்திருந்தேன். சிறிது நேரத்திற்கு பிறகு உதவியாளர் திருமதி. சாந்தி அவர்கள் நான் அமர்ந்திருந்த இருக்கை அருகில் வந்து பணம் எடுத்து வந்துள்ளீரா என்று கேட்டார். நான் வேறுவேலையாக வந்துள்ளதால் பணம் எடுத்து வரவில்லை என்று கூறி, மேடத்தை பார்த்து பேசலாம் என்று வந்துள்ளதாக கூறினேன். அதற்கு உதவியாளர் திருமதி. சாந்தி அவர்கள் ரூ.15,000/– கொடுத்தால் போதும், மேலாளர் மேடத்திடம் தான் பேசி சரிசெய்து கொள்வதாகவும், தான் சொல்வதைத்தான் மேலாளர் மேடமும் சொல்வார்கள் என்றும் தெரிவித்தார். இருந்தாலும் நான் மேலாளர் சாந்தி அவர்களை பார்த்து பேசவேண்டும் என்று கேட்டதற்கு சிறிது நேரம் காத்திருங்கள், மேலாளர் மேடம் அவர்கள் ரூமிற்குள் வருவார்கள், அப்போது பார்க்கலாம் என்று கூறினார். நான் சிறிது நேரம் காத்திருந்தேன். பிறகு மேலாளர் சாந்தி மேடம் அவரது ரூமிற்கு வந்தவுடன் உதவியாளர் திருமதி. சாந்தி என்னிடம் வந்து மேலாளர் மேடத்தை பார்க்க போகலாம் என்று கூறினார். நாங்கள் இருவரும் மேலாளர் மேடத்தின் ரூமிற்குள் சென்றோம். அப்போது உதவியாளர் திருமதி. சாந்தி அவர்கள் மாவட்ட மேலாளரைப் பார்த்து ஏற்கனவே நீங்கள் என்னிடம் கூறியவாறு இவரிடம் ரூ.15,000/– கொடுக்க வேண்டும் என்று

சொல்லிவிட்டதாக அவரிடம் தெரிவித்தார். அதற்கு மேலாளர் திருமதி. சாந்தி அவர்கள் சரியென்று கூறினார். மேலும் மேலாளர் சாந்தி மேடம் அந்த பணத்தை உதவியாளர் சாந்தியிடமே கொடுத்து விடுங்கள் என்று தெரிவித்தார். நான் தொகை ரெடியாகவில்லை என்று தெரிவித்தேன். அதற்கு அவர் பணம் ரெடி செய்துவிட்டால் எப்ப வேனாலும் வந்து பாருங்கள் என்று சொன்னார். இப்போது பணம் ரூ.15,000/– ரெடியாக உள்ளது. அந்த பணத்துடன் தாட்கோ மாவட்ட மேலாளர் திருமதி. சாந்தி மற்றும் அவரது உதவியாளர் திருமதி. சாந்தி ஆகியோரை இன்று சந்திக்க தயாராக உள்ளேன். தாட்கோ மேலாளர் திருமதி. சாந்தி அவர்களுக்கு அவரது உதவியாளர் திருமதி. சாந்தி மூலம் லஞ்சமாக பணம் கொடுத்து என் வேலையை முடிக்க எனக்கு விருப்பம் இல்லை. ஆகவே அவர்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு , ஒப்பம் S.குமார், 15.6.23

Sir, Received the above computer typed complaint on 15.06.2023 at 07.00 hrs, the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I registered a case in Salem Vigilance and Anti Corruption Cr. No. 04/AC/2023 u/s 7(A) and (a) of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 on 15.06.2023 at 08.30 hrs and took up for investigation. Sd xxxx (N.K.RAVICHANDRAN) 15.06.2023, Inspector of Police, V & AC, Salem.

Original FIR along with original computer typed complaint of S. Kumar, S/o Sevathan is submitted to the Hon'ble Special Judge for Trail of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

15/6/23

(N.K.RAVICHANDRAN)
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.